بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 29/03/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஞானமிக்க வழிகாட்டல்களின் ஒளியில் துஆவின் உண்மைத்துவம், துஆவில் உள்ள நுட்பம், துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல் மற்றும் துஆவின் தத்துவம்**

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿١﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿٢﴾ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿٣﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿٤﴾

إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿٥﴾ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿٧﴾

وَإِذَا سَأَلَكَ عِبَادِيۡ عَنِّيۡ فَإِنِّيۡ قَرِيۡبٌ ؕ أُجِيۡبُ دَعۡوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ ۙ فَلۡيَسۡتَجِيۡبُوۡا لِيۡ وَلۡيُؤۡمِنُوۡا بِيۡ لَعَلَّهُمۡ يَرۡشُدُوۡنَ

என் அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றிக் கேட்டால், நான் (அவர்களுக்கு) அருகில் இருக்கின்றேன்; துஆ செய்கின்றவர் என்னை அழைக்கின்ற போது நான் அவருடைய துஆவுக்கு பதில் அளிக்கின்றேன். எனவே, அவர்களும் என் கட்டளையை ஏற்றுக் கொண்டு என் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள் (என்று பதில் அளிப்பீராக)

அல்லாஹ் இந்த வசனத்தை நோன்பின் கட்டளைகளுடன் சேர்த்து வைத்துள்ளான். நடுவில் வைத்துள்ளான் என்றே கூறலாம். ரமலானுக்கு துஆக்களுடன் ஒரு சிறப்பான தொடர்பு உள்ளது என்பது இதிலிருந்து தெரியவருகிறது. ரமலானில் அல்லாஹ்வின் சிறப்பான ஓர் அன்புப் பார்வை தன் அடியார்கள் மீது இருக்கிறது. அல்லாஹ்வோ சாதாரண நாள்களிலும் தன் அடியார்கள் மீது அன்பான பார்வையை செலுத்துகிறான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:-

அல்லாஹ் கூறுகிறான்: என் அடியாரின் சிந்தனைக்கு ஏற்ப நான் அவருடன் நடந்து கொள்கின்றேன். அவர் என்னை உள்ளத்தில் நினைவு கூர்ந்தால் நான் அவரை உள்ளத்தில் நினைவு கூர்கின்றேன்... அவர் என் பக்கம் நடந்து வந்தால், நான் அவர் பக்கம் ஓடிச் செல்வேன்.

எனவே, அல்லாஹ்வோ சாதாரண நிலைகளிலும் அடியாருடன் இவ்வாறு நடந்து கொள்கிறான். பிறகு, ரமலானில் அல்லாஹ் எந்த அளவு கருணையாளனாக இருப்பான் என்பதை நாம் கணித்துக்கூட பார்க்க முடியாது. ஆனால், இந்த எல்லா விஷயங்களும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் மிகவும் நாணமுள்ளவனும், பெரும் கருணையாளனும் வள்ளலும் ஆவான். அடியார் தன்னுடைய இரு கைகளையும் அவனுக்கு முன்னால் ஏந்தும் பொழுது, அவன் அவற்றை காலியாகவும் தோல்வி அடைந்தவையாகவும் திருப்பி அனுப்புவதற்கு வெட்கப்படுகிறான்.

நாம் சில வேளை அவசரப்பட்டு, 'நாங்கள் துஆ செய்தோம்; ஆனால், துஆ ஏற்றுக் கொள்ளப்படவில்லை' என்று கூறி விடுகின்றோம். ஆனால், எந்த அளவு உண்மையான உள்ளம் இருக்கிறது என்று நமது நிலையை நாம் பார்ப்பதில்லை. அல்லாஹ்வை ஏமாற்ற முடியாது. அவனோ நமது உள்ளத்தின் நிலையை அறிகின்றான். திறந்துள்ள அல்லாஹ்வின் வாசலில் நுழைவதற்கு அதற்கு அவசியமான விஷயங்களையும் முழுமைப்படுத்த வேண்டும்.

இந்த வசனத்தில் அல்லாஹ் 'என் அடியார்கள்' என்று கூறியுள்ளான். உண்மையில் இது அல்லாஹ்வின் அடியார்களாக ஆக விரும்பும் மக்களைக் குறிக்கிறது. ரமலானில் இந்த செயலுக்காக சிறப்பான சூழல் கிடைக்கப் பெற்றிருக்கிறது. இந்த சூழலில் இருந்து பயனடைந்தவாறு இந்த நிலை ஏற்படும் பொழுது, பிறகு அல்லாஹ் கூறுகின்றான்: இப்படிப்பட்ட என் அடியார்கள் மற்றும் என்னை நேசிப்பவர்களிடம், நான் துஆக்களைக் கேட்கவும் செய்கின்றேன்; பதிலும் அளிக்கின்றேன் என்று கூறி விடுவீராக.

அல்லாஹ் தெளிவாக இவ்வாறு கூறி விட்டான்: அன்பு கொண்டிருப்பதாக வெறும் வாயளவிலான வாதங்கள் போதாது; மாறாக, நீங்கள் என்னுடைய கட்டளைகள்படி நடக்க வேண்டும். அல்லாஹ்வுக்கான உரிமைகள் மற்றும் அடியார்களுக்கான உரிமைகளை நிறைவேற்ற வேண்டும். ஈமானில் உறுதித்தன்மையையும் உருவாக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் துஆவின் உண்மைத்துவம், துஆவின் நுட்பம், துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல் மற்றும் அதன் தத்துவம் ஆகியவற்றை மிகவும் விளக்கமாக எடுத்துரைத்தவாறு கூறியுள்ளார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இறைவனின் இருப்பிற்கான சான்று என்ன இருக்கிறது? இதற்கான பதிலாவது, நான் மிகவும் அருகில் இருக்கின்றேன். அதாவது, எந்த ஒரு பெரிய சான்றுகளின் தேவையும் இல்லை. எனது இருப்பு மிகவும் நெருக்கமான முறையில் புரிய முடியும். மிகவும் எளிமையாக எனது இருப்பிற்கு சான்று உருவாகிறது. அந்த சான்றாவது, துஆ செய்பவர் ஒருவர் என்னை அழைக்கும் பொழுது நான் அவருடைய துஆவைக் கேட்கின்றேன்.

ஹுஸூர் (அலை) அவர்கள் மேற்கொண்டு கூறுகிறார்கள்: இறைவனைப் பற்றிய ஞானம் எப்படிக் கிடைக்கும் என்ற கேள்வி எழும்பினால், இஸ்லாத்தின் இறைவன் மிகவும் அருகில் இருக்கின்றான்; ஒருவர் அவனை உண்மையான உள்ளத்துடன் அழைத்தால் அவன்

பதிலளிக்கின்றான் என்பது அதற்கான பதிலாகும். மற்ற பிரிவுகளின் (அதாவது, மதங்களின்) கடவுள்கள் நெருக்கமாக இல்லை. மாறாக, அவர்களைப் பற்றிய தகவலே தெரியாத அளவுக்குத் தொலைவில் இருக்கின்றார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நாங்கள் அழைக்கின்றோம்; ஆனால், பதில் கிடைப்பதில்லை என்று கூறுவீர்களாயின், பாருங்கள்! நீங்கள் ஓரிடத்தில் நின்று கொண்டு உங்களை விட்டு மிகவும் தொலைவில் இருக்கக்கூடிய ஒருவரை அழைக்கின்றீர்கள்; மேலும், உங்களுடைய காதிலேயே ஏதோ குறை இருக்கின்றது. அல்லாஹ் பதில் அளித்து விட்டாலும், உங்களுடைய ஈமான் வலுவானதாக இல்லாத காரணத்தினாலும், உங்களுடைய அன்பில் குறை இருப்பதனாலும், அவன் கூறிய விஷயங்கள் படி நீங்கள் அமல் செய்யாததனாலும், உங்களுடைய காதுகளில் இந்த செவிட்டுத்தனம் இருப்பதனாலும், இந்தக் காரணங்களால் நீங்கள் அவனுடைய ஓசையைக் கேட்க முடியாது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: துஆ இறையிருப்பிற்கு மிகப் பெரும் சான்றாகும். துஆ மிகப்பெரும் செல்வமும் ஆற்றலுமாகும். நபிமார்கள் (அலைஹிமுஸ்ஸலாம்) உடைய வாழ்வின் ஆணி வேரும், அவர்களுடைய வெற்றிகளின் அசல் மற்றும் உண்மையான வழிமுறையும் இந்த துஆவே ஆகும். அன்னார் கூறுகிறார்கள்: உங்களுடைய ஈமானிய மற்றும் அமலின் ஆற்றலை அதிகரிப்பதற்காக துஆக்களில் ஈடுபட்டிருங்கள் என்று நான் அறிவுரை கூறுகிறேன். துஆக்களின் மூலமாக எத்தகைய மாற்றம் உருவாகும் எனில், முடிவு நல்லதாக அமைந்து விடும்.

துஆவைப் பற்றிய ஞானத்தின் உண்மைத்துவத்தைப் பற்றி ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஞானம் அருள் மூலமாகக் கிடைக்கப் பெறுகிறது; அருள் மூலமாகவே எஞ்சியும் இருக்கிறது. அருள் ஞானத்தை மிகவும் தூய்மையானதாக, ஒளிமிக்கதாக ஆக்கி விடுகிறது. நாமும் தினமும் துஆ செய்கிறோம்; தொழுகை முழுவதுமே துஆவே ஆகும் என்று நினைக்காதீர்கள். ஏனென்றால், ஞானத்திற்குப் பிறகு அருளின் மூலமாகக் கிடைக்கப் பெறும் அந்த துஆ வேறு ஒரு நிறத்தையும் தன்மையையும் கொண்டிருக்கிறது. அது மாய்த்து விடக்கூடியதாகும். அது உருக்கிவிடக்கூடிய நெருப்பாகும். அது கருணையை ஈர்க்கக்கூடிய ஒரு காந்தவிசையாகும். அது மரணமாகும். ஆனால், இறுதியில் உயிர்ப்பிக்கிறது. துஆ இறைவனிடமிருந்தே வருகிறது; இறைவன் பக்கமே செல்கிறது. உங்களது உயிர் உங்களுக்கு அருகிலிருக்கும் அளவுக்கு துஆவால் இறைவன் அருகில் வந்து விடுகின்றான்.

பிறகு, ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: மேன்மை பொருந்திய அல்லாஹ் தன்னுடைய படைப்பினங்களின் நன்மைக்காக திறந்துள்ள கதவு ஒன்றே ஒன்றாகும். அதாவது, துஆ. ஒருவர் அழுது மன்றாடி அந்தக் கதவில் நுழையும் பொழுது, அந்த கருணையுள்ள

எஜமானன் அவருக்குத் தூய்மை மற்றும் பரிசுத்தம் எனும் போர்வையை அணிவித்து விடுகின்றான். மேலும், தன்னுடைய மகத்துவத்தை எந்த அளவு அவர் மீது மேலோங்கச் செய்து விடுகின்றான் என்றால், தேவையற்ற பணிகள் மற்றும் அசுத்தமான செயல்களில் இருந்து அவர் பல மைல் தொலைவு விலகி ஓடி விடுகின்றார்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* அதாவது, அந்த நபர் உலக நோக்கங்களுக்காக மட்டும் துஆ செய்வதில்லை. மாறாக, இறையச்சம் மற்றும் தூய்மையைப் பெறுவதற்காக துஆ செய்கின்றார். இதுவே ஒரு நம்பிக்கை கொண்டவரின் அடையாளமாகும்.

பிறகு துஆவின் ஆழத்தை மேற்கொண்டு திறந்துக் கூறியவாறு அன்னார் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: அருளைப் பெறுவதற்கான மிக நெருக்கமான வழிமுறை துஆவாகும். முழுமையான துஆவிற்கு அவசியமான விஷயங்கள் இவையாகும்: அதில் உருக்கம் இருக்க வேண்டும். அழுது மன்றாடல் இருக்க வேண்டும். உருகுதல் இருக்க வேண்டும். எந்த துஆ பணிவு, மன்றாடுதல் மற்றும் உடைந்த உள்ளத்தால் நிறைந்திருக்கிறதோ அது இறைவனின் அருளை ஈர்த்து வருகின்றது. அன்னார் கூறுகிறார்கள்: இதுவும் இறைவனின் அருள் இல்லாமல் கிடைக்க பெற முடியாது. எந்த அளவுக்கு அவநம்பிக்கையும், ஆர்வமின்மையும் ஏற்பட்டாலும், துஆ செய்து கொண்டே இருப்பதுதான் இதற்கான சிகிச்சையாகும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: எவர் இரவில் எழுகின்றாரோ, அவர் எந்த அளவுக்கு (மனதளவில்) ஆஜராகதவராகவும், பொறுமை இழந்தவராகவும் இருந்தாலும் சரி, அவர் அந்த நிலையிலும், 'இறைவா! உள்ளம் உன்னுடைய பிடியிலும் ஆதிக்கத்திலும் இருக்கின்றது; நீ அதனைத் தூய்மையாக்கி விடுவாயாக' என்று துஆ செய்கிறார் என்றால், சரியாக மன இறுக்கத்தின் நிலையில் அல்லாஹ்விடம் மனம் இலகுவதற்காக துஆ கேட்கின்றார் என்றால், அப்பொழுது அந்த இறுக்கத்தில் இருந்து மனம் விரிவடையும். உருக்கம் உருவாகி விடும். அந்த நேரத்தில் அவர் ஆன்மாவை இறைவனின் சன்னிதியில் தண்ணீரைப் போன்று வழிந்து ஓடக் காண்பார்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: துஆ எல்லா சிரமங்களையும் எளிமையாக்கி விடக்கூடியதாகும். சிரமத்திலும் சிரமமான பணியும் துஆவால் எளிமையாகி விடுகின்றது. (சில) மக்களுக்கு துஆவின் மதிப்பு மரியாதை தெரிவதில்லை. அவர்கள் மிகவும் விரைவாக சோர்ந்து விடுகிறார்கள். மேலும், துணிவிழந்து கைவிட்டு உட்கார்ந்து விடுகிறார்கள். ஆனால், துஆ ஓர் உறுதித்தன்மையையும் நிரந்தரத் தன்மையும் எதிர்பார்க்கிறது. அதற்காக கலப்பற்ற தன்மை மற்றும் போராட்டம் நிபந்தனையாக இருக்கிறது. அது துஆவின் மூலமாகவே உருவாகிறது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இதற்காக, இந்தக் கலப்பற்ற தன்மை மற்றும் போராடும் நிலை நம்மில் உருவாகி விட்டதா அல்லது நாம் உருவாக்குவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றோமா என்று நாம் நம்முடைய உள்ளத்தைத் தட்டிப் பார்க்க வேண்டிய தேவையுள்ளது. பிறகு, துஆவிலுள்ள தத்துவத்தை எடுத்துரைத்தவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

மனிதன் இந்த வாழ்வை மிகவும் அருவருப்பானதாகக் கருதி அதிலிருந்து வெளியேறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். துஆவால் செயல்பட வேண்டும். ஏனென்றால், அவர் திட்டங்களுக்கான உரிமையை நிறைவேற்றும் பொழுது, பிறகு, உண்மையான துஆவால் செயல்படும் பொழுது, கடைசியில் அல்லாஹ் அவருக்கு ஈடேற்றத்தை வழங்கி விடுகின்றான். மேலும், அவர் பாவம் செய்யும் வாழ்விலிருந்து வெளியே வந்து விடுகின்றார். ஏனென்றால், துஆவும் ஒன்றும் சாதாரண விஷயமல்ல. மாறாக, அதுவும் ஒரு மரணமே ஆகும். அந்த மரணத்தை மனிதன் ஏற்றுக் கொள்ளும் பொழுது, பிறகு அல்லாஹ் மரணத்திற்குக் காரணமாக இருக்கக்கூடிய அந்தக் குற்றமுள்ள வாழ்விலிருந்து அவரைக் காப்பாற்றி விடுகின்றான். மேலும், அவருக்கு ஒரு தூய வாழ்வை வழங்குகின்றான்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: எனவே, இரவுகளில் எழுந்து எழுந்து, மிகவும் அழுது புலம்பி, மன்றாடி இறைவனுக்கு முன் தம்முடைய சிரமங்களை வைக்க வேண்டும். ஒரு மரணத்தைப் போன்ற வடிவம் உருவாகி விடுகின்ற அளவுக்கு அந்த துஆவை எட்ட வைக்க வேண்டும். அப்பொழுது துஆ ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய தரத்தை எட்டுகிறது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இதையும் நினைவில் கொள்ளுங்கள்! மனிதன் தன்னைப் பாவங்களிலிருந்து தூய்மையாக, பரிசுத்தமாக ஆக்கிக் கொள்வதற்கான துஆ செய்ய வேண்டும். இதுவே எல்லாவற்றிலும் தலையாய மற்றும் அவசியமான துஆ ஆகும். எல்லா துஆக்களின் அசல் மற்றும் சாராம்சம் இதுவே ஆகும். ஏனென்றால், இந்த துஆ ஏற்றுக் கொள்ளப்படும் பொழுது, மனிதன் எல்லா விதமான அசுத்தங்கள் மற்றும் மாசுகளை விட்டும் தூய்மையாகி, பரிசுத்தமாகி இறைவனின் பார்வையில் தூய்மையானவன் ஆகிவிடுவான். பிறகு, அம்மனிதனுடைய அவசியமான தேவைகள் தொடர்பான மற்ற துஆக்களை அவனுக்குக் கேட்க வேண்டியதுகூட வருவதில்லை; அவை தானாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டு விடுகின்றன.

துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு என்ன நிலை இருக்க வேண்டும்? இது தொடர்பாக ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: துஆ உச்சகட்ட தரமான மன்றாடுதல் வரை எட்டி விடும்போதுதான் துஆவுக்குள் ஏற்றுக்கொள்ளப்படுதலின் தாக்கம் உருவாகிறது. இது சிறிய விஷயமல்ல.

மாறாக, ஒரு மகத்துவமிக்க உண்மைத்துவமாகும். இன்னும் சொல்வதாயின், எவருக்கு இறைவனின் தோற்றத்தைப் பார்க்க வேண்டுமோ அவர் துஆ செய்ய வேண்டும் என்பதே உண்மையாகும்.

நிரந்தரத் தன்மையோடு துஆ செய்து கொண்டே செல்வது பற்றி அன்னார் (அலை) கூறுகிறார்கள்: துஆ செய்யும் பொழுது, மனவெழுச்சி இல்லாமலும், பதற்றத்துடனும் செயல்படக் கூடாது. விரைவாகவே களைத்துப் போய் அமர்ந்து விடக்கூடாது. மாறாக, துஆ தன்னுடைய முழுமையான தாக்கத்தைக் காட்டிடாத வரை நகரக் கூடாது. எந்த மக்கள் களைத்து விடுகிறார்களோ, பதற்றம் அடைந்து விடுகிறார்களோ அவர்கள் தவறிழைக்கிறார்கள். ஏனென்றால், இது இழப்பிற்குரியவர்களாக இருந்துவிடுவதற்கான அடையாளமாகும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* எல்லாம் வல்ல அல்லாஹ் குறிப்பாக இந்த அருளுக்குரிய மாதத்தை நமக்காக வழங்கியுள்ள இந்த நாள்களில், நாம் நம்முள் தூய மாற்றங்களை ஏற்படுத்தியவாறு துஆக்களின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இதுவே நம்முடைய உலகையும் மறுமையையும் சீர்படுத்துவதற்கான வழியாகும்.

ரமலானின் கடைசி பத்து நாள்கள் ஆகும். இதில் குறிப்பாக நாம் அல்லாஹ்வின் கட்டளைகளை நமது செயல் திட்டமாக ஆக்கிக் கொண்டு, ஈமானில் உறுதி பெற்றவாறு, இரவுகளில் எழுந்து அவனுக்கு முன் குனிந்து அவனுடைய நெருக்கத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

*ஜுமுஆ குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ரமலான் தொடர்பாக துஆக்கள் செய்ய வலியுறுத்தியவாறு, ஜமாஅத்தின் முன்னேற்றம், ஏமனின் இறைவழியில் சிறைசென்றவர்கள் மற்றும் மத்தியக் கிழக்கு நாடுகளில் அநீதிக்குள்ளாக்கப்பட்டவர்களுக்காக துஆக்கள் செய்யுமாறு வலியுறுத்தினார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**